# புத்தாண்டு பிறந்தது

2

| | |
|---|---|
| இடம் | - மோகன் வீடு |
| பாத்திரங்கள் | - மோகன், தங்கை வனிதா, அப்பா, அம்மா |

**(கோயில் மணி ஒலிக்கிறது)**

**மோகன்** :- அப்பா கோயில் மணி ஒலிக்கிறது. புது வருடம் பிறந்து விட்டதா?

**அப்பா** :- இன்னமும் இல்லை. புண்ணிய காலம் தொடங்கிவிட்டது. அதனால்தான் மணி ஒலிக்கிறது.

**வனிதா** :- அப்படியானால் எப்போது அப்பா புது வருடம் பிறக்கும்?



**அப்பா** :- காலை 10.00 மணிக்குத்தான் புது வருடம் பிறக்கிறது. நேரம் ஆகிவிட்டது நான் போய் மருத்து நீர் வாங்கி வருகிறேன்.

**மோகன்** :- மருத்து நீரா? மருத்து நீர் என்றால் என்ன?

**அப்பா** :- அதோ, உங்கள் மாமா வருகிறார். அவரிடம் விளக்கமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

**மோகன் - வனிதா** :- இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் மாமா.

**மாமா** :- உங்களுக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் பிள்ளைகள்.

**மோகன்** :- சித்திரைப் புத்தாண்டைப் பற்றிச் சொல்லுங்கள் மாமா.

**மாமா** :- என்ன சொல்ல வேண்டும்?

**வனிதா** :- அப்பா மருத்து நீர் வாங்கக் கோயிலுக்குச் செல்கிறார். மருத்து நீர் என்றால் என்ன?

**மாமா** :- தாழம்பூ, தாமரைப் பூ, மாதுளம் பூ முதலிய பூக்களையும் எலுமிச்சை, அறுகம்புல், கோசலம், கோமயம் போன்ற வற்றையும் கொண்டு தயாரிப்பதே மருத்து நீர் எனப்படும்.

**மோகன்** :- அதை நாம் தலையில் தேய்த்து குளிக்க வேண்டும் என அம்மா கூறினார். ஏன் மாமா?

**மாமா** :- மருத்து நீர் தேய்த்து நீராடினால் நாம் செய்த குற்றங்கள் நீங்கி விடும் என்பார்கள்.

**மோகன்** :- எமது புத்தாண்டில் வேறு ஏதும் விசேடங்கள் இருக்கிறதா?

**மாமா** :- ஆம். ஏர் மங்களம் செய்தல், கைவிசேடம் ஆகியனவும் விசேடமானவைதான்.

**வனிதா** :- ஏர் மங்களமா? அது என்ன?

**மாமா** :- ஏர் என்றால் கலப்பை. கலப்பையிலே மாடுகளைப் பூட்டி நல்ல நாளான இன்று உழவுத் தொழிலை ஆரம்பிப்பார்கள். இதனைத் தான் ஏர் மங்களம் என்கிறார்கள்.

**மோகன்** :- அப்படியானால் கைவிசேடம் என்றால் என்ன?

**மாமா** :- எங்கள் வாழ்க்கையில் காசு மிக முக்கியமான பொருள். அதை வருடம் பிறந்து நல்ல நேரத்தில் பெரியவர் ஒருவர், கையில் வாங்குவது வழக்கம். இதைத்தான் கைவிசேடம் என்று அழைக்கிறார்கள்.

**அம்மா** :- மோகன், வனிதா வாருங்கள்!

**மாமா** :- அதோ உங்கள் அம்மா அழைக்கிறார்.

**மோகன்** :- நன்றி மாமா. இன்று நிறைய விடயங்களை அறிந்து கொண்டோம். போய் வருகிறோம் மாமா!

**மாமா** :- சரி போய்வாருங்கள் பிள்ளைகள்!

## பாடத்தில் வரும் சில சொற்களும் பொருளும்

| | | |
|---|---|---|
| புது வருடம் | - | අලුත් අවුරුද්ද |
| புண்ணிய காலம் | - | පුණ්‍ය කාල |
| ஒலிக்கிறது | - | නාදවෙනවා. |
| மருந்து நீர் | - | ඖෂධ මිශ්‍රන |
| இனிய | - | රසවත් |
| குற்றங்கள் | - | වැරදි |
| தேய்த்து | - | ගෑම |
| கைவிசேடம் | - | ගණුදෙනු කරනවා |
| கலப்பை | - | නගුල |
| உழவுத்தொழில் | - | ගොවිතැන |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடைத்தருக.**

පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.

1. மருத்து நீரில் இடப்படும் பூக்கள் எவை?
2. கைவிசேடம் என்றால் என்ன?
3. மருத்து நீரை தலையில் தேய்த்து குளிப்பது ஏன்?
4. ஏர் மங்களம் என்றால் என்ன ?

## செயற்பாடு I

உரையாடலை பாத்திரமேற்று குழுவாகச் சேர்ந்து வாசியுங்கள்.

## செயற்பாடு II

சித்திரைப் புத்தாண்டு தொடர்பான இந்துக்களின் சம்பிரதாயங்களைத் தேடி ஒப்படை ஒன்றினைத் தயாரியுங்கள்.

## இலக்கணம்

### வினாச்சொற்கள்

01. சொல்லின் இறுதியில் அ, ஆ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன வந்தால் இறுதியாக 'வ்' மிகும்.
    அவர் உங்கள் அம்மாவா?
    அவர் உங்கள் அம்மா (வ்) + ஆ
    அவர் உங்கள் அம்மாவா?

02. சொல்லின் இறுதியில் இ, ஈ, எ, ஏ, ஐ என்பன வந்தால் 'ய்' மிகும்.
    கவிதாவுக்கு நல்ல பசி
    கவிதாவுக்கு நல்ல பசி (ய் + ஆ)
    கவிதாவுக்கு நல்ல பசியா?

03. **உகரத்தை இறுதியாக கொண்ட சொற்களில் 'உ' நீங்கும்**
    கண்ணுக்கு மை அழகு
    கண்ணுக்கு மை அழக் + (உ) + ஆ
    கண்ணுக்கு மை அழகா?

04. மெய் எழுத்துக்கள் வந்தால் உயிர்மெய் தோன்றும்
    அது நல்ல பால்
    அது நல்ல பால் (ல் + ஆ)
    அது நல்ல பாலா?

05. ‘ய்’ இறுதியாகக் கொண்ட சொற்களில் ‘ய் ’ மிகும்
கவிதைக்கு அழகு பொய்
கவிதைக்கு அழகு பொய் (ய் + ஆ)
கவிதைக்கு அழகு பொய்யா?

## வினா எழுத்துக்கள்

யார்? யாது?
எப்படி?, எங்கே?, எதற்காக? ஏன்?, ஏதுக்கு?
அவ**னா**?, அவ**ளோ**?, அது**வோ**?, அவ**னோ**?

மேலேயுள்ள சொற்களை வாசியுங்கள். இவை கேள்விகளாக வரும் சொற்களாகும்.
இங்கே கேள்வி குறித்து வரும் எழுத்துக்கள் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.
யா, எ, ஏ, ஆ, ஓ என்றும் ஐந்து எழுத்துக்களும் கேள்வி குறித்து வந்தால் அவை வினா எழுத்துக்கள் என அழைக்கப்படும்.

இவ் ஐந்து வினா எழுத்துக்களில் எ, ஏ, யா என்னும் மூன்றெழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வருவன.

**(உ + ம்) எங்கே?, எது?, எப்படி?, ஏன்?, ஏது?, யார்?, யாது?**

ஆ, ஓ, ஏ என்னும் மூன்று வினா எழுத்துக்களும் சொல்லுக்கு முடிவில் வருவன.

உ + ம் அவ**னா**? அது**வா**? வருவா**னா**? பொய்யோ? பூமழை**யோ**? நல்ல**தோ**, கெட்ட**தோ**? அவ**ரே**?

I
எங்கே? எது?
எப்படி? ஏன்
ஏது? யார்?
→ சொல்லுக்கு முதலில் வரும் வினா எழுத்துக்கள்

II
அவனா? அதுவோ?
பொய்யோ? நல்லதா?
அவரே
→ சொல்லுக்கு முடிவில் வரும் வினா எழுத்துக்கள்

## செயற்பாடு III

1. சொல்லுக்கு முதலில் வரும் வினா எழுத்துக்களை எழுதி 5 உதாரணங்களை எழுதுக.

2. இவ்வினா எழுத்து நின்றும் வினாப்பொருளைக் காட்டி வருதலும் உண்டு.

உ + ம் எம்மனிதன்? நல்ல புத்தகமா?
எப்பொருள்? வந்தானோ?
அந்த மனிதனே? சுந்தரா?
மணியனோ?

நின்று வினாப்பொருளைத் தந்தால் அவை ‘அகவினா’ எனப்படும்.

வினா எழுத்துக்கள் சொல்லுக்குள்ளேயே நின்று வினாப் பொருளைத்தந்தால் அவை அகவினா எனப்படும்.

**உதாரணம்:-**

ஏன்?
ஏது?
எப்படி?
யார்?
எங்கே?
ஏது?
யாது?
→ அகவினா

எம் மனிதன்?
எப்பொருள்?
நல்லப் புத்தகமா?
அந்த மனிதனே
→ புறவினா

## செயற்பாடு III

புத்தாண்டு பிறந்தது பாடத்தை அடிப்படையாக கொண்டு பின்வரும் சொற்களை வினாச் சொற்களாக மாற்றி எழுதுக.
පහත සඳහන් වචන ප්‍රශ්න වලට හරවන්න.

1. விட்டது
2. நீர்
3. வேண்டும்
4. இருக்கிறது
5. ஏர்மங்களம்

## செயற்பாடு IV

பின்வரும் சொற்களில் இருந்து வினாச் சொற்களை தெரிவு செய்து எழுதுங்கள்.
පහත සඳහන් වචනවලින් ප්‍රශ්නාර්ථ වචනය තෝරා ලියන්න.
என்ன, காலை, எது, மணி, ஏன், தங்கையா, எவை, தொடங்கிவிட்டது, புத்தாண்டு, யார், எப்படி, வந்ததா, வீடு, வனிதா, தொடங்கி விட்டதா, நல்லதா

## செயற்பாடு V

**பின்வரும் சொற்களை வினாச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்**
පහත සඳහන් වචන ප්‍රශ්නාර්ථ වචනවලට හරවන්න.

1. மருந்து ------------------------------------------------------------------
2. பிறந்தது ------------------------------------------------------------------
3. பாய் ------------------------------------------------------------------
4. நாய் ------------------------------------------------------------------
5. அப்பா ------------------------------------------------------------------
6. பூ ------------------------------------------------------------------
7. மணி ------------------------------------------------------------------
8. கலப்பை ------------------------------------------------------------------
9. ஏர் ------------------------------------------------------------------
10. குற்றம் ------------------------------------------------------------------